தொமுச பொன்விழா மாநாடு: முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை

சென்னை, மே 14: தொமுச பொன்விழா மாநாட்டையொட்டி, முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றவுள்ளார்.

இதுகுறித்து தொமுச பொதுச் செயலர் மு.சண்முகம், ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கை: தொமுச பேரவை பொன்விழா மாநாடு மற்றும் 25-ஆவது பொதுகுழுக் கூட்டம் மே 16-ஆம் தேதி தொடங்கி 18-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

சென்னை கலைவாணர் அரங்கத்தில் 3 நாள்கள் நடைபெறும் மாநாட்டின் நிறைவு நாளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று சிறப்புரையாற்றவுள்ளார். அன்றைய தினம், மாலை 4 மணியளவில், சுவாமி சிவானந்தா சாலையில் பேரணியும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி பகுதியில் 3 வாரங்களில் 1,929 ஆக்கிரமிப்புகள் அகற்றம்

சென்னை மே 14: சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 3 வாரங்களில் பொது இடங்கள், நடைபாதைகளில் 1,929 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களில் பொது இடங்கள் மற்றும் நடைபாதைகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் மற்றும் கட்டடக் கழிவுகளை அகற்றும் வகையில் மண்டல அலுவலர் தலைமையில் மண்டல பறக்கும் படை அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு வாரத்தில் 3 நாள்கள் அதாவது திங்கள், புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் முக்கிய சாலைகளில் ரோந்து பணியில் ஈடுபட்டு ஆக்கிரமிப்பு, கட்டடக் கழிவுகளை அகற்றி வருகின்றனர்.

இந்த நிலையில், கடந்த 3 வாரத்தில் மாநகராட்சி அலுவலர்களுடன் காவல் துறையின் இணைந்து மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையில் பொது இடங்கள், நடைபாதைகளில் 563 நிரந்தர கட்டுமானங்களுடன் கூடிய ஆக்கிரமிப்புகள், 1,366 தற்காலிக கூடாரங்கள் போன்ற ஆக்கிரமிப்புகள் என மொத்தம் 1,929 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

இதில் அதிகப்பட்சமாக அடையாறு மண்டலத்தில் 278 ஆக்கிரமிப்புகளும், கோடம்பாக்கத்தில் 246 ஆக்கிரமிப்புகளும், அண்ணா நகரில் 223 ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டுள்ளன.

மாநகராட்சி பகுதியில் இதுபோன்ற ஆக்கிரமிப்புகளை தாமாக முன்வந்து அகற்ற வேண்டும். அவ்வாறு அகற்றாதவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன் 1-இல் மகா பெரியவர் ஜெயந்தி மகோற்சவம்

மகா பெரியவர்

காஞ்சிபுரம், மே 14: காஞ்சி காமகோடி பீடத்தின் 68 -ஆவது பீடாதிபதியான மகா பெரியவர் சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் ஜெயந்தி மகோற்சவம் வரும் ஜூன் 1 முதல் 3 -ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

இது குறித்து காஞ்சிபுரம் சங்கர மடத்தின் மேலாளர் ந.சுந்தரேச ஐயர் கூறியது..

காஞ்சி காமகோடி பீடத்தில் 87 ஆண்டுகள் பீடாதிபதியாக அலங்கரித்தவர் ஸ்ரீசந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள். தமது வாழ்விலும், எண்ணத்திலும், வாக்காலும் பக்தர்களின் வாழ்வில் ஒரு உத்வேகத்தை ஏற்படுத்திய பெருமைக்குரிய இவர் பக்தர்களால் நடமாடும் தெய்வமாகவே வணங்கப்பட்டு வருகிறார்.

கடந்த 1994- ஆம் ஆண்டு முக்தி அடைந்தாலும் தற்போதும் காஞ்சி சங்கர மடத்தின் பிருந்தாவனத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார். 3 நாள்களும் காஞ்சி சங்கர மடத்தில் வேதபாராயணம், ஆன்மிக சொற்பொழிவுகள், வேத பண்டிதர்களின் கருத்தரங்கம் மற்றும் பக்தி இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெறவுள்ளன. ஜெயந்தி தினமான ஜூன் 3 -ஆம் தேதி ஸ்ரீருத்ர பாராயணம், பூஜைகள், ஹோமங்கள் நடைபெறுன்கிறன.

அன்றைய தினம், நண்பகல் மகா பெரியவர் அதிஷ்டானத்தில் சிறப்பு அபிஷேகமும், விசேஷ அலங்கார தீபாராதனைகளும் நடைபெறுகின்றன. இரவு மகா பெரியவர் உற்சவரின் திருஉருவச்சிலையை தங்கதேரில் எழுந்தருளச் செய்து ராஜவீதிகளில் உலா வரவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்றார் சுந்தரேச ஐயர்.

திரௌபதியம்மன் கோயிலில் தீமிதி திருவிழா

மேல் திருத்தணி திரௌபதியம்மன் கோயில் தீமிதி விழாவையொட்டி நடைபெற்ற துரியோதனன் படுகளம்.

திருத்தணி, மே 14: திரௌபதியம்மன் கோயிலில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற தீமிதி திருவிழாவில் 1,000-க்கும் மேற்பட்ட பக்தர்கள் தீமிதித்து அம்மனை வழிபட்டனர்.

மேல் திருத்தணி அமிர்தபுரம் திரௌபதியம்மன் கோயிலில் தீமிதி திருவிழா கடந்த மாதம் 27-ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. தினமும் மதியம் மகாபாரதச் சொற்பொழிவும், இரவில் நாடகமும் நடைபெற்று வந்தன. இரவு உற்சவர் அம்மன் திருவீதி உலா மற்றும் மூலவருக்கு சந்தனக் காப்பு, சிறப்பு அபிஷேகம், அலங்காரம் நடைபெற்று வந்தது.

விழாவின் நிறைவு நாளான ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு துரியோதனன் படுகளம் நிகழ்ச்சி நடந்தது. தொடர்ந்து, திரளான பெண்கள் கோயில் வளாகத்தில் பொங்கல் வைத்து அம்மனுக்கு படையலிட்டு வழிபட்டனர். மதியம் 12 மணிக்கு அக்னி குண்டத்தில் தீ மூட்டும் நிகழ்ச்சி நடந்தது. மாலை 6 மணிக்கு உற்சவர் அம்மன் சிறப்பு அலங்காரத்தில் அக்னி குண்டம் முன்பு வந்து எழுந்தருளினார்.

தொடர்ந்து, மாலை 7 மணிக்கு 1,000-க்கும் மேற்பட்ட பக்தர்கள் காப்புக் கட்டி விரதம் இருந்து அக்னி குண்டத்தில் இறங்கி தீமிதித்தனர். இரவு வாண வேடிக்கை மற்றும் 8 மணிக்கு உற்சவர் அம்மன் சிறப்பு அலங்காரத்தில் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். விழாவில் திருத்தணி அதைச் சுற்றியுள்ள பகுதியில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர்.

தருமர் பட்டாபிஷேகம்: திங்கள்கிழமை (மே 15) பகல் 11 மணிக்கு தருமர் பட்டாபிஷேகம் நடைபெறுகிறது.

ஒத்திகை...

கடலில் சிக்கியவர்களை ட்ரோன் மூலம் மீட்கும் ஒத்திகை நிகழ்ச்சி, தமிழகத்தில் முதல் முறையாக, சென்னை மெரீனா கடற்கரையில் ஞாயிற்றுக்கிழமை தமிழக கடலோர பாதுகாப்பு படை குழுமம் சார்பில் நடத்தப்பட்டது. இந்த ஒத்திகையை பார்வையிட்ட தமிழ்நாடு ட்ரோன் கார்ப்பரேசன் தலைவர் ஸ்ரீகாந்த், கடலோர பாதுகாப்பு குழுமம் காவல் கண்காணிப்பாளர் எஸ்.பி. சுந்தர வடிவேலு , ஏ.டி.ஜி.பி.சந்தீப் மிட்டல் (இடது).

உத்திரமேரூர் அருகே ஔவையார் கோயில் திருவிழா

அலங்கரிக்கப்பட்ட தேரில் உலா வந்த உற்சவர் ஔவையார்.

காஞ்சிபுரம், மே 14: காஞ்சிபுரம் மாவட்டம் ஆலஞ்சேரி கிராமத்தில் அமைந்துள்ள ஔவையார் கோயில் திருவிழாவையொட்டி ஞாயிற்றுக்கிழமை கூழ்வார்த்தல் நிகழ்வும், அலங்கரிக்கப்பட்ட தேரில் ஔவையார் உலாவும் நடைபெற்றது.

உத்திரமேரூர் ஒன்றியத்துக்குள்பட்ட ஆலஞ்சேரி கிராமத்தில் தமிழ் மூதாட்டி ஔவையாருக்கென்று தனிக் கோயில் உள்ளது. ஆண்டு தோறும் அக்னி நட்சத்திர நாள்களின் போது இக்கிராமத்தில் ஔவையார் திருவிழா நடத்தப்படுகிறது.

நிகழாண்டு இம்மாதம் 4 -ஆம் தேதி முதல் 29- ஆம் தேதி வரை அக்னி நட்சத்திரம் நடைபெற்று வருகிறது. ஆலஞ்சேரியில் ஔவையார் கோயில் திருவிழாவையொட்டி டு கோயிலில் திருவிழா கொடியேற்றம் 12 -ஆம் தேதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

2-ஆவது நாளாக சனிக்கிழமை கிராமத்தில் உள்ள கோயில்கள் அனைத்திலும் உள்ள சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேகமும், ஆராதனையும் நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக ஔவையார் கோயிலில் காலையில் மூலவருக்கு சிறப்பு அபிஷேகமும், தீபாராதனைகளும் நடைபெற்றன. நண்பகல் கிராமத்தின் சார்பில் கூழ்வார்த்தல் நடைபெற்றது.

பின்னர், சிறப்பு அலங்காரத்தில் ஔவையார் உற்சவர் தேரில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். நிறைவாக, ஜோதி ஊர்வலமும் நடைபெற்றது.

விழா ஏற்பாடுகளை ஊராட்சி மன்ற தலைவர் அமுதா தமிழ்வேந்தன் தலைமையில் கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

ஓய்வு பெற்ற அரசு ஊழியர் வீட்டில் கொள்ளை வழக்கு: 2 பேர் கைது

சென்னை மே 14 : கொளத்தூரில் ஓய்வுபெற்ற அரசு ஊழியர் வீட்டில் கொள்ளை நடந்த சம்பவத்தில் இரண்டு பேரை போலீஸார் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 27 பவுன் தங்க நகைகள், 250 கிராம் வெள்ளி ஆபரணங்கள், 36,500 ரூபாய் ரொக்கப்பணம் கைப்பற்றப்பட்டதாக போலீஸார் தெரிவித்தனர்.

ஓய்வுபெற்ற அரசு அதிகாரி கெ. குணசேகரன் (70) கொளத்தூரில் உள்ள டீச்சர்ஸ் காலனியில் வசிக்கிறார். இவர் வெளியூருக்கு சென்றிருந்தபோது வீட்டின் முன்பக்க கதவு உடைக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து குணசேகரன் அளித்த புகாரின் அடிப்படையில் எண்ணூரைச் சேர்ந்த ஜி.மோகன் என்கிற மொட்ட மோகன் (56) மார்ச் 1 ஆம் தேதி ஏற்கெனவே கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில், இந்த சம்பவத்தில் தொடர்புடைய கொள்ளையர்கள் அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த வி.தினகரன் (35), ராமநாதபுரத்தை சேர்ந்த எம். செல்வக்குமார் (38) ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தினகரன் மற்றும் மோகன் 15 வருடங்களுக்கு முன்பு சிறையில் ஒன்றாக இருந்தவர்கள் என்றும், அவர்கள் திருச்சி, தஞ்சாவூர், திண்டிவனம் மற்றும் பெங்களூர் போன்ற பல இடங்களில் 2008 ஆம் ஆண்டு முதலே பல கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டு வந்ததும் தெரியவந்துள்ளது.

சென்னை கோ-ஆப்டெக்ஸில் பட்டுப் புடவை கண்காட்சி

சென்னை, மே 14: பட்டுத் தயாரிப்புகளை சந்தைப்படுத்தி வரும் சென்னை கோ-ஆப்டெக்ஸில், மே 22-ஆம் தேதி வரை பட்டுப் புடவை கண்காட்சி நடைபெறுகிறது.

எழும்பூரில் தொடங்கியுள்ள இந்த கண்காட்சியில் பல்வேறு பட்டுச் சேலை நெசவாளர்கள், கைத்தறி அமைப்புகள், பட்டுக் கூட்டுறவு சங்கங்கள் தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தி, விற்பனை செய்கின்றன. நெசவாளர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையே இடைத்தரகர்கள் இல்லாமல், தயாரிப்புகளை வாடிக்கையாளர்கள் நேரடியாக அணுகி தங்களுக்கு பிடித்தமான சேலைகளை இங்கு வாங்கலாம்.

இந்த கண்காட்சி மே 22-ஆம் தேதி வரை காலை 10.30 முதல் இரவு 8.30 மணி வரை நடைபெறுகிறது. மேலும் இங்கு புடவைகள் வாங்குபவர்களுக்கு 20 சதவீதம் வரை சிறப்பு தள்ளுபடியும் வழங்கப்படுகிறது. நாடு முழுவதிலிருந்தும் பல வகை தயாரிப்புகள் இந்தப் பட்டுப் புடவை கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

விதிகளை மீறி சுவரொட்டி ஒட்டியவர்களுக்கு ரூ.1.87 லட்சம் அபராதம்

சென்னை, மே 14: சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பொது இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டிய நபர்களுக்கு ரூ.1.87 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரை தூய்மையாகவும், அழகுடனும் பராமரிக்க சிங்கார சென்னை 2.0 உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின்கீழ் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், பொது இடங்களில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள், வரையப்பட்டுள்ள சுவர் விளம்பரங்கள் அழிக்கப்பட்டு, அவ்விடங்களில் தமிழக கலாசாரத்தையும், வரலாற்று சிறப்புகளையும் குறிக்கும் வகையிலான கண்கவரும் வண்ண ஓவியங்கள் வரையப்பட்டு அழகுபடுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், ஏப்.27 முதல் மே 11-ஆம் தேதி வரை அரசு, மாநகராட்சி கட்டடங்கள், பெயர் பலகைகள் மற்றும் பொது இடங்களில் விதிகளை மீறி சுவரொட்டி ஒட்டிய 1,072 நபர்கள் மீது காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டு ரூ. 1 லட்சத்து 87 ஆயிரத்து 600 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி பொது இடங்களில் விதிகளை மீறி சுவரொட்டி காணப்பட்டால் 1913 என்ற மாநகராட்சி உதவி எண்ணை பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆவினில் மலிவு விலை குடிநீர் பாட்டில்கள்

சென்னை, மே 14: ஆவினில் மலிவு விலை குடிநீர் பாட்டில்கள் இரு மாதங்களுக்குள் விற்பனைக்கு வரும் என தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் தெரிவித்துள்ளது.

இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் பட்சத்தில் தமிழக அரசு சார்பில் செயல்படுத்தப்படும் இரண்டாவது குடிநீர் விற்பனைத் திட்டமாக இது அமையும்.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், பால் பாக்கெட்டுகள் விலையை உயர்த்தாமல் ஆவினின் வருமானத்தைப் பெருக்கும் நோக்கில் 500 மி.லி. மற்றும் 1000 மி.லி. குடிநீர் பாட்டில்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஆவினின் அனைத்துக் கடைகள், பேருந்து நிலையங்களில் இந்த குடிநீர் பாட்டில்கள் விற்பனைக்கு வரும் என தெரிவித்தனர். கடந்த அதிமுக ஆட்சியின் போது அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் அம்மா மினரல் வாட்டர் என்ற பெயரில் ஒரு லிட்டர் 10 ரூபாய்க்கு குடிநீர் விற்கப்பட்டது. பின்னர், இத்திட்டம் பல்வேறு காரணங்களால் கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மனோபாலா அனைவராலும் நேசிக்கப்பட்டவர்

நடிகர் டெல்லி கணேஷ்

சென்னை மே 14: நடிகர் மனோபாலா அனைவராலும் நேசிக்கப்பட்ட ஒரு அற்புதமான மனிதர் என குணச்சித்திர நடிகர் டெல்லி கணேஷ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நகைச்சுவையாளர்கள் சங்கம் சார்பில் ஞாயிற்றுக்கிழமை சென்னை மயிலாப்பூரில் நடைபெற்ற 40-ஆம் ஆண்டு மாதாந்திர கூட்டத்தில் நடிகர் டெல்லி கணேஷ் பேசியது:

மனோபாலாவை எனக்கு ஆரம்ப காலத்தில் இருந்தே தெரியும். கதை சொல்வதில் அவர் வல்லவர்.

திரைத்துறையில் அனைவராலும் நேசிக்கப்பட்ட ஒரு அற்புதமான மனிதர் மனோபாலா. இயக்குநராக தன் பயணத்தை ஆரம்பித்த அவர், நகைச்சுவை நடிகர், தயாரிப்பாளர் என தன் வாழ்நாள் முழுவதையும் சினிமாவிற்காகவே அர்ப்பணித்தார் என்றார்.

நிகழ்வில் முன்னதாக, மறைந்த நாடகக் கலைஞர் கே.எஸ்.நாகராஜன், மனோபாலா ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் தேவகோட்டை எஸ்.ராமநாதன், சிரிப்பொலி பி.எல்.சிதம்பரம், சர்வதேச நகைச்சுவையாளர்கள் சங்கச் செயலர் ஆர்.சேகரன், பொருளாளர் பி.கண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்திய ரிசர்வ் வங்கி
www.rbi.org.in
வழங்கல் துறை
சென்னை

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

இந்திய ரிசர்வ் வங்கி, சென்னையிலிருந்து தமிழ்நாடு மாநிலம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலுள்ள பணக்கருவூலத்திற்கும், வங்கிக் கிளைகளுக்கும் இடையேயான போக்குவரத்துக்கு, மூடிய டிரக்குகளில் புதிய / அழுக்கான பண நோட்டுகளை அனுப்புவதற்காக அனுபவம் வாய்ந்த, பெயர் பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து, ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறது.

ஒப்பந்தத்தின் காலம் ஜூலை 01, 2023 முதல் மார்ச் 31, 2024 வரையிலான ஒன்பது மாதங்கள் ஆகும். விவரங்களை எமது (இந்திய ரிசர்வ் வங்கியின்) **www.rbi.org.in** என்ற இணையதளத்தின் "ஒப்பந்தப்புள்ளி" பிரிவின் கீழ் பார்க்கவும்.

இடம் : சென்னை — மண்டல இயக்குநர்
தேதி : 15.05.2023 — இந்திய ரிசர்வ் வங்கி

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

மேற்கு CIT நகர் கிளை: #60/34, தெற்கு உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை600017 Tel: 044-2434 3707 / 2433 0852, Email: iob0441@iob.in

(APPENDIX IV) **அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு** [(Rule 8(1)]

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 and Security Interest (Enforcement) Rules, 2002) கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான **இந்தியன் ஓவர்சீஸ் வங்கி**, 13(12) பிரிவு மற்றும் விதி 3-ன்படி **06.08.2022 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட கடன்பாக்கி தொகையான 31.07.2022** அன்றுள்ளபடி **ரூ.42,84,787.33** (ரூபாய் நாற்பத்து இரண்டு லட்சத்து எண்பத்து நான்காயிரத்து எழுநூற்று எண்பத்து ஏழு மற்றும் பைசா முப்பத்து மூன்று மட்டும்) மற்றும் திரும்ப செலுத்தும் காலம் வரை ஒப்புக்கொள்ளப்பட்டபடி வட்டி, இதர செலவுகளையும் சேர்த்து அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று **கடன்தாரர் 1.M/s. விநாயகா ஏஜென்சீஸ் (கடன்தாரர்) அதன் சார்பாக கூட்டாளிகள் Mrs.G.சரளா மற்றும் Mr.K.கோவிந்தராஜ்**, எண்.5, பாரதி தெரு, காவேரி நகர், சைதாப்பேட்டை, சென்னை, தமிழ்நாடு-600 015. **2.Mrs.G.சரளா (ஜாமீன்தாரர் / அடமானதாரர்)** W/o.K.கோவிந்தராஜ், **3.Mr.K.கோவிந்தராஜ் (ஜாமீன்தாரர்)** S/o.கருப்பண்ணன், **இருவரது முகவரி:** #ப்ளாட் எண்.311, இன்பினிட்டி, சுந்தரேசன் நகர், 3வது தெரு, போரூர் கார்டன், பேஸ்-II, வானகரம், சென்னை- 600 095 (இனி கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் என்றழைக்கப்படுவர்) **ஆகியோருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.**

கடன்தாரர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன்தொகை முழுவதையும் செலுத்தத்தவறியதால், குறிப்பாக கடன்தாரர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதியின் படியும், **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 10.05.2023 அன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் உடைமையாக்கியுள்ளார்.**

இது முதற்கொண்டு கடன்தாரரோ அல்லது மற்ற பொது மக்களோ இந்த சொத்தில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் **அது இந்தியன் ஓவர்சீஸ் வங்கி-க்கு வந்து சேரவேண்டிய கடன்தொகையான 31.07.2022** அன்றுள்ளபடி **ரூ.42,84,787.33** (ரூபாய் நாற்பத்து இரண்டு லட்சத்து எண்பத்து நான்காயிரத்து எழுநூற்று எண்பத்து ஏழு மற்றும் பைசா முப்பத்து மூன்று மட்டும்) மற்றும் கோரிக்கை அறிவிப்பு தேதியிலிருந்து திரும்ப செலுத்தும் காலம் வரை ஒப்புக்கொள்ளப்பட்டபடி வட்டி, இதர செலவுகள். **சுவாதீனம் எடுத்த தேதிப்படி கடன் தொகை ரூ.43,29,257.36** (ரூபாய் நாற்பத்து மூன்று லட்சத்து இருபத்து ஒன்பதாயிரத்து இருநூற்று ஐம்பத்து ஏழு மற்றும் பைசா முப்பத்து ஆறு மட்டும்) மற்றும் திரும்ப செலுத்தும் காலம் வரை ஒப்புக்கொள்ளப்பட்டபடி வட்டி, கட்டணங்கள், இதர செலவுகளுக்கு கட்டுப்பட்டவை என்று இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடன் வசதிகள் மற்றும் கடன் நிலுவைத்தொகைகள் விவரம் பின்வருமாறு:

வ. எண்	கடன் வசதி	கடன் தொகை	10.05.2023 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத்தொகை*
1.	CCPUB (A/c No. 044102000005648)	Rs.30,00,000/-	Rs.31,34,126.03
2.	GECL (A/c No. 044103510000010)	Rs.6,00,000/-	Rs.5,80,151.99
3.	Vehicle Loan (A/c No. 044103452000034)	Rs.10,00,000/-	Rs.6,14,979.34
		மொத்தம்	Rs.43,29,257.36

*மேற்கண்ட தேதியிலிருந்து திரும்ப செலுத்தும் காலம் வரை அதனுடன் வட்டி மற்றும் அபராத வட்டி @ 2%, கட்டணங்கள் போன்றவை

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. (ஈடுபெற்ற சொத்து).

சொத்து விபரம்

சொத்தின் வகை: பிணையம்

For CC& GECL: Hypothecation of Stocks and Book debts.

For Vehicle Loan: Hypothecation of Hyundai Verna 1.6 VTVT SX car having registration No. TN 09 CS 0600 (Polar White Colour).

சொத்தின் வகை: அடமானம்

For CC& GECL: முறையான அடமானத்தினை தொடர்ந்து மூலப் பத்திரங்களின் டெபாசிட் பதிவு செய்யப்பட்ட குறிப்பாணை படி, ஈரோடு பதிவு மாவட்டம் மற்றும் சூரம்பட்டி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட R.S எண். 173/5, புஞ்சை ஹெக்டேர் 0.63, பழைய S.F எண். 406-D/2, புஞ்சை ஏக்கர் 1.04, பெரியசேமூர் கிராமம், ஈரோடு தாலுகா, ஈரோடு மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள குடியிருப்பு வீட்டு சொத்து. எல்லைகள்: வடக்கு தெற்கு ரோடு மற்றும் K.பைசுதீன், K.அப்துல் சலாம், K.ஷேக் தாவூத் & N. அன்சாரிஜான் வகையறாவின் நிலத்திற்கு கிழக்கு, 10 அடி அகல (10 X 88) கிழக்கு மேற்கு சாலைக்கு தெற்கு, K.அப்துல் சலாம் நிலத்திற்கு மேற்கு, பழனியப்பா நாடார் நிலத்திற்கு வடக்கு. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கில் 44 அடி, கிழக்கு மேற்காக தெற்கில் 44¼ அடி மற்றும் வடக்கு தெற்காக இரண்டு பக்கமும் 43 அடி. ஆக மொத்தம் 1914 சதுர அடி வீட்டு மனை மற்றும் தளம்போட்ட கட்டிடம், பொது சாலையில் உரிமைகள் மற்றும் அனைத்து அனுபந்த உரிமைகள்.

மேற்கண்ட சொத்தானது, கதவு எண்.8/48A , பட்சபள்ளி மேடு (முத்து கவுண்டர் தெரு) மதிப்பீடு எண்.126 மற்றும் வார்டு எண்.1, பிராமண பெரிய அக்ரஹாரம் ஸ்பெஷல் பஞ்சாயத்து. சொத்தானது Mrs.G.சரளா W/o.K.கோவிந்ராஜ் பெயரிலுள்ளது. (சூரம்பட்டி சார் பதிவு அலுவலகத்தில் 26.12.2007 தேதியிட்ட ஆவண எண்.3575/2007 மற்றும் 21.02.2019 தேதியிட்ட உரிமை பத்திர குறிப்பாணை ஆவண எண். 530/2019)

தேதி : 10.05.2023 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : சென்னை — இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

ADITYA BIRLA CAPITAL **PROTECTING INVESTING FINANCING ADVISING**

ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: இந்தியன் ரேயான் காம்பவுண்ட், வேராவல், குஜராத்-362266
கிளை அலுவலகம்: அலகு #10 & 12, 4வது தளம், ஓவல் கட்டிடம், வெங்கட் நாராயணா சாலை, தி.நகர், சென்னை- 600 017

தனி ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(5) மற்றும் 9(1) ஷரத்துகள் (54/2002) படி அசையா சொத்துகளின் தனி ஒப்பந்தத்தின் மூலம் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்களுக்கும், ஜாமீன்தாரர்களுக்கும், மறைந்த Dr. A.M. அருண் அவர்களின் சட்டப்படியான பிரதிநிதிகளுக்கும் அறிவிப்பது யாதெனில்: ஈடு பெற்ற கடன் வழங்கியுள்ள நிறுவனத்திடம் (Secured Creditor) அடமானம், ஈடு வைக்கப்பட்டுள்ள, இங்கே விவரிக்கப்பட்டிருக்கும் சொத்துகள், ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிட்-ன் (Secured Creditor) அதிகாரபூர்வ அலுவலர் அவர்களால் நேரடி சுவாதீனத்தில் (Physical Possession) எடுத்துக் கொள்ளப்பட்டு, அந்தச் சொத்துகள், கடன்தாரர்கள் (i) வாசன் மெடிக்கல் சென்டர் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்- கடன் கணக்கு எண். 80000107 (கடன்தாரர்) மற்றும் டாக்டர். A.M. அருண் (மறைந்த) மற்றும் திருமதி. மீரா அருண் (ஜாமீன்தாரர்கள்) (ii) வாசன் மெடிக்கல் சென்டர் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்- கடன் கணக்கு. எண். 80000009 (கடன்தாரர்) மற்றும் டாக்டர் A.M. அருண் (மறைந்த) மற்றும் திருமதி மீரா அருண் (ஜாமீன்தாரர்கள்) (iii) டாக்டர். A.M. அருண் (மறைந்த) மற்றும் திருமதி மீரா அருண்-கடன் கணக்கு எண். 80000245 (கடன்தாரர்கள்) ஆகியோரிடமிருந்து ஈடு பெற்று கடன் வழங்கிய மேற்படி நிறுவனத்திற்குச் சேரவேண்டிய கடன் பாக்கி 31 மார்ச் 2023 அன்றுள்ளபடியான ரூ. 38,25,11,721/- (ரூபாய் முப்பத்தெட்டு கோடியே இருபத்தைந்து லட்சத்து பதினோராயிரத்து எழுநூற்று இருபத்தொன்று மட்டும்) மற்றும் அத்தொகை செலுத்தப்படும் வரை சேரும் வட்டி மற்றும் கட்டணங்கள் சேர்த்து வசூலிப்பதற்காக 'உள்ளது உள்ளவாறு, உள்ள இடத்தில் உள்ளவாறு, உள்ள தெல்லாம் உள்ளவாறு' எனும் அடிப்படையில் தனி ஒப்பந்தத்தின் மூலம் அல்லது E-ஏலத்தில் (Inter se) தனி ஒப்பந்தத்தின் மூலம் அல்லது E-ஏலத்தில் (Inter se) ஒன்றுக்கு மேற்பட்ட விலைப்புள்ளி பெறப்படுமானால் அதாவது நிறுவனத்திற்கு ஏற்புடைய தனி ஒப்பந்தத்தின் மூலம் 02.06.2023 அன்று விற்கப்படவுள்ளன.

குறைந்தபட்ச (ரிசர்வ்) விலை மற்றும் EMD தொகை பின்வருமாறு:

அசையா சொத்துகளின் விவரம்: கடன் வழங்கிய நிறுவனத்திடம் ஒப்புக்கொண்ட விதிகளின் படி	ரிசர்வ் விலை	EMD தொகை 25%
நிலம் & கட்டிடம் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், பரப்பளவு 5312 சதுர அடி மற்றும் சுமார் அங்குள்ளபடி பரப்பளவு 1575 சதுர அடி கட்டப்பட்டபடி. RS.எண 1575/5 பகுதி, பழைய கதவு எண்.37A, புதிய கதவு எண் 52, கஸ்தூரிரங்கன் ஐயங்கர் சாலை, (J J சாலை), தேனாம்பேட்டை, சென்னை-600 018, சென்னை மத்திய பதிவு மாவட்டம் மற்றும் எல்லைகள்: வடக்கு-JJ சாலை, தெற்கு -விஷ்ராந்தி ஹோம்ஸ், மேற்கு- திரு. தஸ்வானி சொத்து, கிழக்கு- திரு. கோபாலன் சொத்து. இந்த நான்கு எல்லைக்குள்: அளவீடுகள் : கிழக்கிலிருந்து மேற்காக இருபுறமும் 63.3/4 அடி, வடக்கிலிருந்து தெற்கு இருபுறமும் 83 அடி, மொத்தமாக பரப்பளவு 5312 சதுர அடி, மனை அதிலுள்ள தரை தளம் மற்றும் முதல் தளம் RCC கட்டிடம் மற்றும் அனைத்து வசதிகள் கட்டமைப்புகள் சுற்று சுவர்கள் மற்றும் வழக்கமான பாதை மற்றும் ஈஸ்மெண்ட் உரிமைகள் உட்பட. விற்பனை பத்திரத்தின் படி, மேலே கூறப்பட்ட சொத்து அமைவிடம், கஸ்தூரிரங்கன் ஐயங்கர் சாலை (J.J. சாலை), தேனாம்பேட்டை, மயிலாப்பூர் தாலுகா, சென்னை சென்ட்ரல் எல்லை, (இணை 1 சார் பதிவாளர்).	ரூ. 20,25,00,000/-	ரூ 5,06,25,000/-
மொத்தம்	ரூ 20,25,00,000/-	ரூ 5,06,25,000/-

ஸ்தலத்தில் ஆய்வு செய்த தேதி மற்றும் நேரம்: - 17.05.2023 முதல் 31.05.2023 வரை காலை 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை, முன் அனுமதி பெற்று மட்டும்.

ஏலம்/டெண்டர் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி, நேரம் மற்றும் இடம்:- 01.06.2023 அன்று மாலை 05.00 மணிக்கு முன், ஆன்லைன் முறையில் மட்டும்.

ஏலம் நடைபெறும் தேதி, நேரம் மற்றும் இடம்: - 02.06.2023 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை. ஒவ்வொன்றும் ஐந்து நிமிடங்கள் கொண்டதாக தானாகவே நீட்டிப்புடன்.ஏலம் "ஆன்லைனில்" நடத்தப்படும்.

விற்பனை குறித்த விரிவான விதிமுறை நிபந்தனைகளுக்கும், மற்ற விவரங்களுக்கும் ஈடு பெற்று கடன் வழங்கிய நிறுவனத்தின் இணையதளம் பார்க்கவும்: https://mortgagefinance.adityabirlacapital.com/Pages/Individual/Properties-for-Auction-under-SARFAESI-Act.aspx or https:// sarfaesi.auctiontiger.net.

ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்-க்காக
நாள்: 12.05.2023 — அதிகாரபூர்வ அலுவலர்
இடம்: சென்னை — No.:9710917596